ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2013/2 - 2017 අප්‍රේල් මස 03 වැනි සඳුදා - 2017.04.03

2013/2 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கப்படுகின்றது.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தங்கல்ல வீரகெட்டிய வீதி, இல. 2/2 மற்றும் 2/3 பால மீள் கட்டுமானத்திற்காக காணி எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்கல்ல பிரதேச செயலாளர் பிரிவில், மேற்கு கிருவா பத்துவ சிறு பிரிவில், கொடவானகொட கிராம அலுவலர் பிரிவில், வல்கம்எலிய கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இ. கி. வ. 316 இல் 2016.12.08 ஆந் திகதிய ஆரம்ப வரைபட துண்டு இல. 312, 315, 329, 330 துண்டு இல. 4 இல் விபரிக்கப் பட்டுள்ள 0.0128 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகளின் எல்லைகள் :-

01. **துண்டு இல. 312 - நலவகும்புர; விஸ்தீரணம்: 0.0106 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 313, இல. தெரியாது வீதி மற்றும் 311; கிழக்கு: துண்டு இல. 311, 67 மற்றும் 314; தெற்கு: துண்டு இல. 314, 67 மற்றும் 315; மேற்கு: துண்டு இல. 316, 313 மற்றும் 315;

02. **துண்டு இல. 315 - நலவகும்புர ; விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 316 மற்றும் 312; கிழக்கு: துண்டு இல. 314 மற்றும் 67; தெற்கு: துண்டு இல. 67 மற்றும் 317; மேற்கு: துண்டு இல. 317, 318 மற்றும் 316;

03. **துண்டு இல. 329 - நலவகும்புர ; விஸ்தீரணம்: 0.0009 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 326, 328 மற்றும் 67; கிழக்கு: துண்டு இல. 67; தெற்கு: துண்டு இல. 67 மற்றும் 330; மேற்கு: துண்டு இல. 327 மற்றும் 326;

04. **துண்டு இல. 330 - நலவகும்புர ; விஸ்தீரணம்: 0.0002 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 326, 329 மற்றும் 67; கிழக்கு: துண்டு இல. 67; தெற்கு: துண்டு இல. 67, 333 மற்றும் 332; மேற்கு: துண்டு இல. 332, 327 மற்றும் 326;

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு தங்கல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

என். டபிள்யூ. யாபா,
பிரதேச செயலாளர்,
தங்கல்ல.

பிரதேச செயலகம்,
தங்கல்ல,
2017, மாச்சு 23.

4 - 446

1A - G 025368 - 17 (2017/04)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.